88 A/L
2 வது பிரிவு
12 00 Maths திரு. நல்லையா
11 30 Zoo திரு. தம்பிராஜா
12-00 Bot திரு. சர்வானந்தா
8 30 Phy திரு. யோகானந்தா
9-30 Chem திரு. செல்வா, அன்ரன்
ஆரம்பம்: 3-8-86 (ஞாயிறு)
BECON
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

87 A/L 88
2nd Batch
Sat Sun.
1.30 பௌதிகவியல் - திரு. வரதராஜன்
12 00 கணக்கியல் - திரு. பரியதாஸ்
11 00 வர்த்தகம் - திரு. பட்டணம்
10 00 அளவையியல் - திரு. எஸ். எஸ். மனோகரன்
9.00 இந்துநாகரகம் - திரு. அருள்நங்கை
8.00 தமிழ் - திரு. நாகேஸ்வரன்
புவியியல், அரசியல், -
ஆரம்பம் - 3.8.86 (ஞாயிறு)
BECON (ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 15 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 23 (31-07-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்: 218

## வவுனியா மாவட்டத்தில்

# ஈச்சங்குளத்தில் புலிகள் - படை நேரடி மோதல்

வவுனியா, ஜூலை 31

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஈச்சங்குளப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும், அரச படைகளுக்கும் இடையில் கடும் மோதல் நடந்தது.

நேற்றுப் பிற்பகல் தொடங்கிய மோதல் இரவு ஒரு மணி வரையிலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்ததாக இங்கு தகவல் கிடைத்தது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை உயிர்ச் சேதம் பற்றிய விபரம் எதுவும் கிடைக்கவில்லை.

இதே தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

சுமார் 200 இராணுவச் சிப்பாய்கள் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஈச்சங்குளப் பகுதியால் சென்றுகொண்டிருந்த சமயம் எமது போராளிகள் அவர்களை இடைமறித்து நேரடி மோதல் தொடுத்தனர்.

அப்போது எமது தாக்குதலுக்கு இராணுவத்தினர் நிலைகுலைந்தனர். இராணுவத்தினர் மேலும் நகராதவாறு எமது வீரர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதற்கு முன்னர் 200 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் முன் கூட்டியே வந்து பதுங்கி இருப்பதை அறிந்து எமது உறுப்பினரான திருபன் அவர்களைப் பற்றி அறிந்து வருவதற்காகச் சென்றபோது இராணுவத்தினர் அவர்மீது திடீரென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவர் வீரமரணம் அடைந்துள்ளார்.

வீரமரணம் அடைந்த திருபன் (கலா தி, பாவற்குளம்) எமது வீரவணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

### உலகின் சனத்தொகை 500 கோடியானது

கடந்த ஜூலை 7 ஆம் திகதியுடன் உலகின் சனத்தொகை ஐந்நூறு கோடியைத் தாண்டி விட்டது.

19 ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் சனத்தொகை 100 கோடியானது.

இந்நூற்றுண்டின் 1930 களில் சனத்தொகை 300 கோடிக்கு வந்தது.

2 000 ஆம் ஆண்டில் உலகின் சனத்தொகை 1050 கோடியாகி விடும் இவ்வாறு ஐ. நா நிபுணர்கள் நீ கணிப்பீடு கூறுகின்றனர்.

1986 ஜூலை 7 ஆம் திகதி முக்கிய தினம் என்று சமூகவியலாளர்களும், பூகோளவியலாளர்களும் கூறுகின்றனர்.

இத்தினத்தில் பிறந்த குழந்தைகள் 500ஆவது கோடிப் பிரசைகளாவர் — இப்படி ரஷ்ய சமூகவியலாளர் இகோர் பெஸ்ருவேல்லடா கூறுகிறார். (உ-எ)

### சுபநேரம்

31—07—1986
வியாழக்கிழமை

சுபநேரம்:
7-33 முதல் 9-03 வரை
ராகுகாலம்:
1-33 முதல் 3-03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### பாடசாலைகள் இன்று விடுமுறை

யாழ்ப்பாணம், ஜூலை 31

இரண்டாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் இன்றுடன் மூடப்படுகின்றன.

மீண்டும் 3 ஆம் தவணை தொடக்கத்துக்காக செப்டம்பர் 1 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும்.

தீவுப்பகுதி அசம்பாவிதங்களால் சில நாட்கள் இயங்காமல் இருந்த புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகள் ஆகஸ்ட் 27 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளன. (இ-5)

### வவுனியாவில் தபால்ஊழியர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 31

வவுனியாவில் நேற்று தபால் ஊழியரான ரவீந்திரன் ரவீந்திரன் என்பவர் (வயது 19) ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

தபால் சந்தோயில் இருந்து வீடு திரும்பிக் கொண்டு இருந்த சமயம் இவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முருகன் என்ற இளைஞனும் படையினரால் கைது செய்யப்பட்டார். (இ-எ)

### வவுனியாவில் இளைஞனுக்கு மரணதண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 31

வவுனியாவில் கடந்த செவ்வாய் இரவு ரவிக்குமார் என்ற இளைஞனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் பல தமிழ் இளைஞர்கள் ஆயுதப் படையினரிடம் பிடிபடுவதற்குக் காரணமாக இருந்தவர் இவர் என்று பிரசுரம் ஒன்றில் எழுதப்பட்டிருந்தது.

புளொட் இயக்கம் இம் மரணதண்டனையை விதித்தது. (இ-எ)

## கிளிநொச்சி இலங்கை வங்கிக்கிளை திறக்கப்பட்டு உடன் மூடப்பட்டது

### உத்தியோகத்தர்கள் யாழ் திரும்பினர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஒரு மாதகாலமாக மூடியிருந்து நேற்றுத் திறக்கப்பட்ட கிளிநொச்சி இலங்கை வங்கிக்கிளை மீண்டும் மூடப்பட்டது.

இளைஞர் குழு ஒன்றே வங்கியை மூடும்படி உத்தியோகத்தர்களைப் பணித்தது.

இது பற்றி அறியப்படுவதாவது;

கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையில் கடமை புரியும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 30 உத்தியோகத்தர்கள் கடந்த ஒரு மாத காலமாக கிளிநொச்சி போகவில்லை.

ஒரு மாத காலமாக இவர்கள் யாழ் மாவட்டத்திலுள்ள வங்கிகளிலேயே சமுகம் அளித்து வந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இவர்களை கிளிநொச்சி செல்லுமாறு வடபிராந்திய இலங்கை வங்கி முகாமையாளர் பணித்திருந்தார்.

இதனால் இவர்கள் நேற்று கிளிநொச்சி சென்றார்கள்.

பரந்தனிலிருந்து இவர்கள் தங்கள் வங்கிக் கிளைக்கு நடந்தே சென்றனர்.

வழியில் வங்கி முகாமையாளர் ஆயுதம் தாங்கிய இளைஞர்களால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### போதைவஸ்துக் கடத்தல்

## 4 இலங்கையருக்கு ஆறு வருடச் சிறை

### பிரெஞ்சு நீதிமன்றம் விதித்தது

பாரிஸ், ஜூலை 30

நான்கு இலங்கையருக்கு பிரெஞ்சு நீதிமன்றம் ஒன்று தலா 6 வருட சிறைத் தண்டனை விதித்தது.

போதைப் பொருள்களைக் கடத்தியதற்காகவே இத் தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை பெற்ற இலங்கையர்களின் விபரம் வருமாறு:

1. முகமது ரபீக்
2. கபுல்குமார் வீரசிங்க
3. டொமினிக் ஜேக்கப்
4. அந்திரேசா ஹூர்து (வெனி)

இவர்கள் நால்வரும் பம்பாயில் இருந்து பிரான்ஸில் உள்ள நைஸ் விமான நிலையத்தில் வந்திறங்குகையில் பிடிபட்டனர்.

கருத்தடைச் சாதனம்

(4-ம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



ஐந்து பிள்ளைகள் ஒரு வீட்டிலே இருந்தாலே பெரும் சங்கடமாயும், கஷ்டமாயும் இருக்கு. உண்மையிலே பூமாதேவி பொறுமை உள்ளது தான்... ஐந்நூறு கோடிப் பேரையும் சமாளிக்கிறது எவ்வளவு பெரிய காரியம்....!

### இனப்பிரச்சினை:

## ஜி. பி., வெங்கடேஸ்வரனுடன் டிக்ஸிற் சந்தித்து பேச்சு

புதுடில்லி, ஜூலை 30

அரசு — கூட்டணி நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதர் ஜே. என். டிக்ஸிற் புதுடில்லியில் இந்திய அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார்.

இந்திய வெளியுறவு கொள்கை வகுப்புக் குழுவின் செயலாளர் ஜி பார்த்தசாரதி, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசினர்.

அரசு — கூட்டணி பேச்சுவார்த்தைகளின் போது கிடைத்த பெறுபேறுகள் குறித்து இருவருக்கும் திரு. டிக்ஸிற் விளக்கமளித்தார்.

காணிப்பங்கீடு, சட்டம் ஒழுங்கு ஆகிய விடயங்களில் காணப்பட்ட முன்னேற்றம்.

இருதரப்பினருக்கும் இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை தொடரவேண்டிய அவசியம் ஆகியவை பற்றி திரு. டிக்ஸிற் விளக்கமளித்ததாகத் தெரிகிறது.

இதே வேளை தற்போதைய நிலை குறித்து திரு ஜி பார்த்தசாரதி, வெங்கடேஸ்வரன் ஆகியோருடன் ஆராய்வதற்காக கூட்டணிக் குழுவும் புதுடில்லி வருகிறது. (அ-உ)

### மாகாணசபைகள் வந்தால்

## தொண்டா தலைமையில் 'மலைநாடு' உருவாகும்

### மல்வத்தை பீடாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 31

மாகாண சபை முறை, திரு. எஸ். தொண்டமான் தலைமையில் 'மலைநாடு' ஒன்று உருவாவதற்கு வழி வகுக்கும்.

மாகாண சபையை எதிர்ப்பதற்குரிய காரணங்களில் ஒன்றாக மேற்கண்ட காரணத்தை மல்வத்தைப் பீடம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

ஏனைய காரணங்கள் வருமாறு:-

● ஒற்றை ஆட்சித் திட்டத்தின் கீழேயே சிங்கள மக்கள் கொல்லப்படுகின்றனர். பௌத்த விகாரைகள் அழிக்கப்படுகின்றன. மாகாண சபைகள் அமைக்கப்பட்டால் இன்னும் நிலைமை மோசமாகும்.

● இடம் பெயர்ந்த சிங்கள மக்கள் உறுதி கூறப்பட்டபடி இன்னும் வடக்கு, கிழக்கில் மீண்டும் குடியமர்த்தப் படவில்லை ஆனால் எங்களைப் பகுதிகளில் தமிழ் மக்கள் திம்மதியாக வாழுகின்றார்கள் இது திருப்திகரமான நிலை அல்ல.

● இந்திய அரச முறை வெற்றிகரமானது அல்ல; அதைப்பின்பற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## துன்னாலைப் பெண்ணின் அடையாளக்கார்ட் திருமலையில் ஒரு மர்மம்!

திருகோணமலை, ஜூலை 31

திருமலை ரயில் நிலையம் அருகில் கிடக்கக் கண்டெடுக்கப் பட்டதாகக் கூறி சிங்களவர் ஒருவரால் தமிழர் ஒருவரிடம் ஒப்படைக்கப் பட்ட யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண் ஒருவரின் ஆட்பதிவுத் திணைக்கள அடையாளக்கார்ட் பெரும் மர்மம் ஒன்றை ஏற்படுத்தி உள்ளது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் ரயில் நிலையத்துக்கு அருகில் அடையாளக்கார்ட்டைக் கண்டெடுத்ததாக அச்சிங்களவர் சொன்னார் — இப்படி அக்கார்டை திருமலை பிரஜைகள் குழுவிடம் சமர்ப்பித்த தமிழர் தெரிவித்தார்.

அப் பெண்ணுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதில் பிரசைகள் குழுவினர் அக்கறை காட்டியுள்ளனர்.

அடையாளக் கார்ட்டில் பெண்ணின் பெயர் விலாசம் பின்வருமாறு இருக்கிறது!

மார்கிரட் செல்வமணி ஆறுமுகம்

பிறந்த இடம்: நெல்லியடி வசிப்பிடம்: துன்னாலை தெற்கு, வடமராட்சி தெற்கு.

பிறந்த ஆண்டு 1947

திருமலை ரயில் நிலையத்துக்கு அருகில் தமிழர் நடமாட முடியாத நிலைமை உள்ளது. மூன்று வாரங்களுக்கு முன்னர் திருமலை ரயில் நிலையத்திற்கு அருகில் தமிழர் தாக்கப்பட்டனர்: சிலர் கொலையும் செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது! (இ-எ,150)

### யாழ் மாவட்டத்தில் 7,969 பரீட்சார்த்திகள்

## ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் ஜீ. சி. ஈ. உயர்தரப்பரீட்சை நாளை ஆரம்பமாகின்றது.

11,9,755 பரீட்சார்த்திகள் இம்முறை தோற்றுகிறார்கள்.

இவர்களில் 86,149 பேர் பாடசாலை மூலமாக தோற்றுகிறார்கள்.

யாழ் மாவட்டத்தில் 7,969 பரீட்சார்த்திகள் இம்முறை தோற்றுகிறார்கள்.

இவர்களில் 100 பேர் வரையில் வெளி மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களாவர்.

இவர்களுக்கென பிரத்தியேக பரீட்சை மண்டபம் யாழ் நாவலர் மகா வித்தியாலயத்தில் கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தின் 63 பரீட்சை மண்டபங்கள் உட்பட 759 பரீட்சை மண்டபங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கல்மடுவில் நிலக்கண்ணி!

### 4 சிப்பாய்கள் பலி; 4 பேர் காயம்

வவுனியா, ஜூலை 13

வவுனியா — கல்மடுவில் நடந்த நிலக்கண்ணி வெடிச் சம்பவத்தில் நான்கு இராணுவத்தினர் மாண்டனர். மற்றும் நால்வர் காயமடைந்தனர்.

நிலக்கண்ணி வெடிச் சம்பவம் நேற்று பிற்பகலில் நடந்தது.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் வவுனியா இராணுவ முகாமிலிருந்து நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் வாகனங்களில் ஒமந்தை— கல்மடு பக்கமாகச் சென்றனர் என அறியப்படுகிறது.

அவர்களில் ஒரு பகுதியினரே நிலக்கண்ணியில் சிக்கியதாகச் சொல்லப்பட்டது.

நிலக்கண்ணிச் சம்பவத்தைத் தொடர்ந்து படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் பல பொது மக்கள் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (அ-1)

### செய்திச் சாரம்

### சோதனை தடுப்பு முகாம்கள் அகற்றப்பட்டன

திருகோணமலை, ஜூலை 31

திருகோணமலை பகுதியில் சேருவாவிலயில் இருந்த சோதனைத்தடுப்பு முகாமும் சந்தையில் இருந்த சோதனைத் தடுப்பு முகாமும் அகற்றப்பட்டுள்ளன.

ஏற்கனவே அலஸ் தோட்டத்தில் உள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டு விட்டது. (இ-எ-150)

### மலையகத்தில் துண்டுப் பிரசுரம்

கொழும்பு, ஜூலை 31

தமிழில் அச்சிடப்பட்ட அநாமதேய துண்டுப் பிரசுரங்கள் மலையகம் எங்கும் விநியோகிக்கப் பட்டன.

தமிழீழம் அமைந்தால் மலையகத்தில் தமிழர் நிலை என்னவாகும்— இப்படி துண்டுப்பிரசுரங்களில் எழுதப்பட்டிருந்தது. (இ-ஐ-எ)

### தந்தையும் மரணமானார்

யாழ்ப்பாணம் ஜூலை 31

கடந்த திங்கட்கிழமை யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் காயம் அடைந்த ஆசீர்வாதம் குணநாதனைச் சேர்ந்த சின்னத்தம்பி மார்க்கண்டு (60 வயது) நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இவரது வீட்டு வளவுக்குள் ஷெல் விழுந்து வெடித்ததினால் இவரது மகன் நேற்று முன்தினம் மரணமானது குறிப்பிடத்தக்கது. (இ-10)

### 43 தமிழ்க் குடும்பங்கள் தஞ்சம்

திருகோணமலை, ஜூலை 31

ஊர்காவல் படையினரின் பயமுறுத்தலுக்கு அஞ்சிச் சேருவில் தொகுதியில் உள்ள 43 தமிழ்க் குடும்பங்கள் கிண்ணியாவில் உள்ள ஈச்சந்தீவு அரசினர் பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடந்த 24 ஆம், 25 ஆம் திகதிகளில் ஊர்காவல் படையினர் சேருவிலத் தைப் பகுதிக்குச் சென்று இத்தமிழ்க் குடும்பங்களை வெளியேறும்படி பயமுறுத்தினர் என்று முறையிடப்பட்டுள்ளது. (இ-எ-150)

### பரீட்சை எழுத 4 மாணவர் விடுதலையாவர்

திருகோணமலை, ஜூலை 31

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை எழுதுகின்ற நான்கு திருமலைத் தமிழ் மாணவர்கள் இன்று பூஸாவில் இருந்து விடுதலை செய்யப்படுவர்.

இப்படி பாதுகாப்பு வட்டாரம் திருமலை பிரசைகள் குழுவுக்கு அறிவித்துள்ளது.

இந்துக்கல்லூரி, செயின் யோசப் கல்லூரி ஆகியவற்றில் படிக்கும் மாணவர்களே இவர்கள்

இவர்களைப் பொறுப்பேற்று திருமலைக்கு அழைத்துவர பிரசைகள் குழு உறுப்பினர் சிலர் நேற்று பூஸா சென்றனர். (இ-எ-150)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சை:

# கல்விப் பணிப்பாளர் ஒத்துழைப்புக் கோருகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஜீ. சி. ஈ உயர்தரப் பரீட்சையை ஒழுங்காக நடத்துவதற்கு பொது மக்களும், பெற்றோர்களும், பழைய மாணவர்களும், சமூக அமைப்புக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பரீட்சை உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள் கலந்துரையாடலின்போது வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திலும் ஒழுங்காகவும், கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ளவேண்டும்.

என்னதான் பிரச்சினைகள் யாழ்ப்பாணத்தில் நடந்தாலும் பரீட்சைகள் நிறுத்தப்படமாட்டாது.

நிறுத்தப்பட்ட பரீட்சைகளை மீண்டும் நடத்த முடியாது என கல்வி அமைச்சும் அறிவித்துள்ளது.

எனவே ஒவ்வொரு பரீட்சை மண்டபத்திலும் விழிப்புக்குழுக்களைச் சேர்ந்தவர்களையும் மாணவர்களையும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

விசேஷ நோக்குநர்களும் ஒவ்வொரு பரீட்சை மண்டபத்துக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சை மண்டபங்களில் விசேஷ நோக்குநர்களை நியமிப்பது இதுவே முதற்தடவை.

எனவே மாணவர்களின் எதிர்காலத்தை நிச்சயிக்கும் இப் பரீட்சையை ஒழுங்காக நடத்துவதற்கு சகலரும் தம்மாலியன்ற முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

இப்படி பணிப்பாளர் கேட்டுக் கொண்டார். (இ-10)

## சிங்களத்தில் கைநூல்

பலாலி, ஜூலை 3

வெள்ளிக்கிழமைஆரம்பமாகும் ஜீ சி ஈ.(உயர்தர) பரீட்சையின் மேற் பார்வையாளராகக் கடமையாற்றும் பலருக்கு, பரீட்சை சம்பந்தமான விதிமுறைகள் பற்றிய கைநூல் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மிக முக்கியமான பரீட்சை விதிமுறைகளைப் பற்றி அறிய முடியாது தடுமாறும் மேற்பார்வையாளர்களுக்கு தமிழ்க் கைநூல் வரவழைத்து வழங்க யாழ் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (உ-119)

# கனேடிய உதவியுடன் குழாய்க் கிணறுகள்

## மல்லாகத்தில் நிறுவப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 31

கனேடிய அரசின் உதவியுடன் மல்லாகம் வயல் நிலங்களில் பத்து குழாய்க் கிணறுகளையும் ஒரு காற்றாலையையும் நிறுவும் வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பமாக உள்ளன.

இதற்காக கனேடியத் தூதரகம் பிரிட்டனைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் குழந்தைகளைப் பாதுகாக்கும் இயக்கத்துக்கு 1 லட்சத்து 18 ஆயிரம் ரூபாவைக் கொடுத்துள்ளது.

இந்த இயக்கத்தின் யாழ்ப்பாணக்கிளை, குழாய்க் கிணறுகளையும் காற்றாலையையும் அமைக்கும் வேலைகளை கோப்பாய் ஒருக் எஞ்ஜினியர்ளிடம் ஒப்படைத்துள்ளது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கவே குழந்தைகளைப் பாதுகாக்கும் இயக்கம் இப்பணியில் ஈடுபட்டுள்ளது.

கோடை காலத்தில் அடும் வரட்சி காரணமாக மல்லாகம் பகுதி வயல் கிணறுகள் வற்றிப் போகின்றன. இதனால் உப உணவுப் பயிர்ச் செய்கையை நம்பியுள்ள 500 குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. அக்குடும்பங்களின் நன்மை கருதி 100 குழாய்க் கிணறுகளை இப்பகுதியில் நிறுவுவதற்கு பிரிட்டிஷ் அரசு உதவ வேண்டும்.

—இவ்வாறு கோரி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு எஸ். ஸ்ரீபாஸ்கரன் பிரதமர் மார்கரட் தாட்சருக்கு கடிதம் அனுப்பி இருந்தார்.

பிரதமர் தாட்சர் இவ் வேண்டுகோளை சேமநலத்தேய அபிவிருத்தி நிர்வாகத்துக்கு அனுப்பி இருந்தார்.

இந்த அபிவிருத்தி நிர்வாகம், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளை குழந்தைகளைப் பாதுகாக்கும் இயக்கத்துக்கு அனுப்பி வைத்தது.

அந்தஇயக்கம்கனேடிய தூதரகத்துடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்தே இப்பணம் ஒதுக்கப்பட்டது.

பத்துக் குழாய்க் கிணறுகளும் ஒரு காற்றாலையும் பரீட்சார்த்தமாக அமைக்கப்படும்.

இதன் வெற்றியைப் பொறுத்தே மிகுதிக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும், என்று சங்கத் தலைவர் திரு ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்தார். (இ-எ)

## ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை:

# விண்ணப்பிக்கத் தவறிய மாணவருக்கு மற்றொரு வாய்ப்பு வழங்கக் கோரிக்கை

பலாலி, ஜூலை 31

ஜீ. சி. ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறி உள்ள பாதிக்கப்பட்ட மாணவர்கள் விண்ணப்பிப்பதற்குச்சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

தன்னுடைய பிரஜைகள் குழுத்தலைவர் திரு. ஆ. வ. தம்பிராசா கல்வி அமைச்சருக்கு மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆகும்.

சுமார் 80 வீதமான மாணவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறி உள்ளனர் என்று தெரியவருகிறது. (இ-119)

## நீர்ப்பாசன வசதி

கல்முனை, ஜூலை 31

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள 16,200 ஏக்கர் நெற்காணிகள் தற்போது நல்ல நீர்ப்பாசன வசதி பெறுகின்றன.

இதனால் நீண்ட காலமாக நீர்ப்பாசனமின்றி கஷ்டமும், நஷ்டமும் அடைந்து வந்த இப்பகுதி விவசாயிகள் தற்போது பெரு மகிழ்ச்சியடைந்துள்ளனர். (இ-84)

## சிறிமாவுக்கு வந்த பயம்

கொழும்பு ஜூலை 31

மாகாண சபைகள் மூலம் புலிகள் பொலிஸ் நிலையங்களைப் பிடித்துக் கொள்வர். பின்னர் அதனை வைத்துக் கொண்டு தாக்குதலைத் தொடர்வர்.

இப்படிக் கூறினார் ஸ்ரீ ல. சு. கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா. மத்துகமவில் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அஸ்கிரிய பீடாதிபதி சந்தானந்த மாநாயக்க தேரர் அங்கு பேசுகையில் 'மாகாணசபை இலங்கையை ஒரு தமிழ் நாடாக மாற்றிவிடும்'' என்றார். (உ-ஐ-எ)

## சண்முகசுந்தரம் காலமானார்

காங்கேசன்துறை, ஜூலை 31

எழுத்தாளரும் ஆராய்ச்சியாளருமான தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. த. சண்முகசுந்தரம் தம் 61 ஆவது வயதில் காலமானார்.

எழுத்துத் துறையில் 40 ஆண்டு காலத்தை செலவழித்த இவர் ஆராய்ச்சி நூல்களையும் கலைகள் பற்றிய நூல்களையும் எழுதி உள்ளார்.

கவிதை, நாடகம் போன்றவற்றை படைத்துள்ளார்.

இவரின் "வாழ்வு பெற்ற வள்ளி'' என்ற நாடகத்துக்கும், கலை அருவி பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் வாழ்வைச் சித்திரிக்கும் நூலுக்கும் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

கலைக்கழக தமிழ் நாடகக் குழுவின் உறுப்பினராக 18 வருடங்கள் இவர் கடமையாற்றியுள்ளார். (இ-68)

# தமிழிலும் தரமான திரைப் படங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 31

சாதாரண சமன்பாடுகளுக்கு வித்தியாசமான தரமான தமிழ்ப் படங்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்குடன் எமது திரைப் பட வட்டம் 'அவள் அப்படித்தான்' என்ற தமிழ்ப் படத்தை இங்கு அறிமுகம் செய்கின்றது. உலகத் திரைப்படங்களுடன் ஒப்பிடத்தக்க வகையில் தமிழிலும் தரமான படங்களைத் தயாரிக்கலாம் என்பதற்கு இத்தகைய படங்கள் சான்று ஆகும்.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கலாசாரப் பெருமன்றத்தின் திரைப் பட ரசிகர் வட்டம் ஏற்பாடு செய்த ருத்ரய்யாவின் 'அவள் அப்படித்தான்'' படக்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசிய குப்பிழான் ஐ சண்முகன் மேற்கண்டவாறு கூறினார்.

இத்திரைப் படத்தைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில் திருவாளர்கள் நெல்லை க பேரன், கே. சிதம்பரப்பிள்ளை, ச. முருகானந்தன், எஸ் வ னியகுலம், கருணை யோகன், தெணியான், த கலாமணி ஆகியோர் பங்கு பற்றினர்.

சங்கத் தலைவர் திரு எஸ். சிதம்பரப்பிள்ளை நன்றியுரை கூறினார். (இ)

# விநாயகர் வித்தியாலய பேச்சுப் போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, ஜூலை31

வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த பேச்சுப்போட்டிகள் வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திரு. செ சின்னரத்தினம் தலைமையில் நடைபெற்றன.

போட்டிகளுக்கு பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அதிபர் திரு. க. அனந்தராஜா, வல்லை மகளிர் மகாவித்தியாலய ஆசிரியர் திரு எஸ் அருளானந்தம், கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் திரு. என். சண்முகம், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி அ கந்தசாமி ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

வெற்றியீட்டிய மாணவர் விவரம் வருமாறு:-

பாலர் பிரிவு: க. துஷாந்தி, செ.சமந்தன், பா. ரேபிமினி.

ஆண்டு 1: இ. இராஜினி, ஞா. மைதிலி. ந. தாரணி.

ஆண்டு 2: வி விஜிதா, சி. யாமினி, சோ. பேபின் பநாதன்.

ஆண்டு 3: செ நிசாந்தினி, த. இராஜராஜன், த. சுகந்தன்.

ஆண்டு 4: சி. சுபாசினி, ஜோ. யாழினி, அ தர்சினி.

ஆண்டு 5: க. ஜெயந்திரன், த சுதர்சன், அ பத்மலோஜினி.

ஆண்டு 6: து. சிவநந்தினி, த. சுதர்சன், மா இரமணன்.

### ஆங்கிலம்

பாலர்: க. துஷாந்தி, பூ. சியாமா, செ. சமந்தன்.

ஆண்டு 4: அ. தர்சினி, ம. வார்மிளா, ந ஜீவரஞ்சினி.

ஆண்டு 5: க ஜெயந்திரன், சி. மயூலதா, ஆ. சகுந்தலா.

ஆண்டு 6: க. ஜீவகுமார், மா. இரமணன், சி. மயூதரன். (இ)

## விஞ்ஞாபனங்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை31

வடபகுதிக்கான ஜி.சி. ஈ. உயர்தர பரீட்சை விஞ்ஞாபனங்கள் வந்து சேர்ந்தன.

பலாலி முகாமுக்கு விமானம் மூலம் வந்திருந்த விஞ்ஞாபனங்களை பொதிகளை கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் சென்று பொறுப்பேற்றார். (இ-5)

## பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் பார்த்திபன்

இணுவில் டாக்டர் தம்பதிகள் ப. சிவகுமார்—சி. சாந்தினி ஆகியோரின் புதல்வன் சி பார்த்திபன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று கொண்டாடுகிறார். அவரை அப்பப்பா, அப்பம்மா, சித்தா, மாமா, மாமி பிள்ளைகள், அம்மப்பா, அம்மம்மா ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.


## தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவம் வாய்ந்த உதவியாளர்கள் (Helpers). குமிழர்கள் (Bubblers). ஆகியோரும் வெட்டும் பகுதி (Cutters) யில் கடமையாற்றக் கூடிய அனுபவமுள்ள பெண்களும் தேவை.

ஆகஸ்ட் 4ஆம், 9ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை சான்றிதழ்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு சமுகம் கொடுக்கவும்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இலவச தங்குமிடமும் குறைந்த சலகரில் சாப்பாட்டு வசதிகளும் வழங்கப்படும்.

த பெனின்சுலா குறூப்
மகேந்திரா கண்ணாடி தொழிற்சாலை
இல. 9, கண்டி வீதி, நாவற்குழி


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# வீரமணி ஐயர் சாகித்ய ஸாகரம் பட்டம் வழங்கப்பட்டு கௌரவம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஸ்ரீ வீரமணி ஐயர் 'சாகித்ய ஸாகரம்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையின் யோக மண்டபத்தில் நடந்த விழா ஒன்றில் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயருக்கு இப்பட்டம் வழங்கப்பட்டது.

வைபவத்துக்கு ஆசிரியர் கலாசாலை அதிபர் செல்வி ச சின்னப்பு தலைமை வகித்தார்.

இலங்கையில் மட்டும் அல்ல தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பிரபலம் பெற்றவர் ஸ்ரீ வீரமணி ஐயர் — என்று அதிபர் செல்வி சின்னப்பு தெரிவித்தார்.

விரிவுரையாளர் திரு க விரசிங்கம் பேசுகையில், பாடலை இயற்றி அதற்கு இசை அமைத்து பயன்படுத்தும் திறமைகளைக் கொண்டவர் ஸ்ரீ வீரமணி ஐயர்—என்று பேசினார்.

பட்டம் அளித்துக் கௌரவித்த கலாசாலை நிர்வாகத்துக்கு ஸ்ரீ வீரமணி ஐயர் நன்றி சொன்னார்.

விழா அமைப்பாளர் திரு துரைராசா, பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார் சங்கீத பூஷணம் திரு குமாரசாமி வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தார். மற்றும் பலர் பேசினர். (இ-எ)

## ஆகஸ்ட் 9இல் லலித் வெளியில்

கொழும்பு, ஜூலை 31

தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகஸ்ட் 9ஆம் திகதி வெளிநாடு ஒன்று செல்லவிருக்கின்றார்.

அவர் செல்லவிருக்கும் வெளிநாடு எது என்பது வெளியிடப்படவில்லை. (உ-எ)

## வவுனியாவில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை31

வவுனியாவில் ரயில் நிலையப் பக்கமாக சைக்கிளில் வந்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் சிப்பாய்களினால் கைது செய்யப்பட்டனர்.

காளிமுத்து முருகன் (17 வயது) என்பவரே கைதானவர் ஆவார். (இ-10)

## மக்கள் முகம்

## புங்குடுதீவு சனசமூக நிலையம்

கண்டுக்குளி, ஜூலை 31

புங்குடுதீவு சிறுப்பிட்டி சனசமூக நிலைய நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் த தேவராசா, உபதலைவர் பு. வரதராஜா, இணைச் செயலாளர்கள் சி உத்தரதாஸன், ப. மோகனகுமார், பொருளாளர்:- பு தர்மகுலசிங்கம்

விளையாட்டுக் குழுத் தலைவர்கள் சி. திருச்செல்வம், ப. கமலநாதன்

இத்துடன் 7 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் 6பேர் கொண்ட அன்னதான சபையும் தெரிவு செய்யப்பட்டன.

அன்னதான சபையின் தலைவராக து வேலுப்பிள்ளை தெரிவானார்.

## வரியிறுப்பாளர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஜூலை.31

யாழ் மாநகர வரியிறுப்பாளர் சங்கத்தின் புதிய தலைவராக திரு சு செ. மகாதேவா மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

ஏனைய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

உப தலைவர்கள்: த. இராசேந்திரம், ம. அலோசியஸ், ம. இஸடீன்

செயலாளர்: மு. மகாலிங்கம்

உதவிசெயலாளர்: இ. மைக்கல்

பொருளாளர்: கு. சிறில்

செயற்குழு: வே. பொன்னம்பலம், சி. செல்லையா, ம. ச. குமரேசன், கு. மரியாம்பிள்ளை, ம. நடேசு, லோறன்ஸ், ச. சண்முகதாஸ், செ இராஜநாதன். (இ-[illegible])

# உருளைக்கிழங்கு செய்கை 373 ஏக்கராக குறைவு

## வெங்காய, மிளகாய் செய்கையும்அதேநிலையில்

பலாலி, ஜூலை 31

யாழ் மாவட்டத்தில் 1250 ஹெக்டரில் செய்யப்பட்ட உருளைக் கிழங்கு இவ்வருடம் முன்னூற்று எழுபத்திமூன்று ஏக்கராகக் குறைந்துள்ளது. குடாநாட்டின் வெங்காயம், மிளகாய்ச் செய்கையும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி கண்டுள்ளது.

யாழ் மாவட்ட சமநல சேவைகள் இணைக்கள, கிரேஷ்— உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கானை பொதுநூல் நிலையத்தில் மறுமலர்ச்சி மன்றத் தலைவர் திரு. பொ செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் உரைப் புரையாற்றினார்.

சிவதர்ம வள்ளல் திரு. க கனகராசா மரக்கன்றுகளையும், விதைகளையும் வழங்கி உரையாற்றினார்.

சங்கானை கிழக்குப் பிரிவு விவசாயிகள் குழுப் பொதுச் செயலாளர் திரு க விரசிங்கம் பல விதைகளை வழங்கினார்.

யாழ் அபிவிருத்திச் சபையின் அத்தியட்சகர் திரு பொ. ஜெயரத்தினசிங்கம் மங்கள விளக்கேற்ற சங்கானை கிழக்குப் பிரிவு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. ஜீ சிதம்பரநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ் விவசாய இளைஞர் உதவிப் பணிப்பாளர் திரு ச கிருஷ்ணபிள்ளை, பேராசிரியர் கா. சதாசிவம்பிள்ளை, திரு. எஸ். குமாரவேல், திரு. பி. குசைப்பிள்ளை, திரு. ச தம்பிராசா, திரு வ கதிரமலை, திரு. வை பாலகிருஷ்ணன், திரு யோ. செல்வராசா, திரு எஸ் குமாரசாமி ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர்.

வட்டு. இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மாணவிகளின் விவசாயக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (இ-119)

# பல சிரமங்களின் மத்தியிலேயே கல்லூரியை நடத்தவேண்டியுள்ளது

## பிரிவுபசார விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 30

கலிவீட்டைக் கட்டிப் பார் கல்யாணத்தை நடத்திப்பார் என்போர் எமது முன்னோர். இன்று கல்லூரியை நடத்திப்பார் என்றும் கூற வேண்டியுள்ளது. ஏனெனில் ஓர் அதிபர் பல சிரமங்களின் மத்தியிலேயே இன்று கல்லூரியை நடத்தவேண்டி உள்ளது.

பிரதம கல்வியதிகாரி திரு. கு சோமசுந்தரம் இவ்வாறு கூறினார்.

யாழ் இந்துமகளிர் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் செல்வி. ம. இராமநாதனின் பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்றது.

அவரின் சேவை நலன் பற்றி திரு சோமசுந்தரம் மேலும் பேசுகையில், பல சிரமங்கள் [illegible] ஆண்டுகள் அதிபராக சிறப்பாக பணியாற்றியது ஒரு சாதனையே என்றார்.

இவ்விழா, கல்லூரியின் அபிவிருத்திச் சபை உப தலைவர் திரு செ கோடீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

அவர் தமது தலைமையுரையில் அதிபர்களின் பாரம்பரியத்தைக் காப்பாற்றி, தமது சேவை மூலம் அதிபர்களின் நன்மதிப்பை உயர்த்தியவர் முன்னாள் அதிபர் என்றார்.

இளைப்பாறிய அதிபரின் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்த கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பேசுகையில்;

செல்வி இராமநாதன் சிறந்த சிந்தனையும், உறுதியான உள்ளமும், உள்ளவர் என்றார்.

வட்டாரக் கல்வியதிகாரி [illegible] மூர்த்தி, கலாநிதி எஸ் [illegible] திரு. வே. பொன்னம்பலம், கல்லூரி பழைய மாணவிகள் திருமதி. இ ஜெகானந்தகுரு, திருமதி இ. ஜோகநாதன் ஆகியோரும் அதிபரின் சேவை நலன் பாராட்டிப் பேசினர்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் அதிபரின் சேவை நலன் பாராட்டி வாழ்த்துப் வழங்கினார்.

திருமதி கமலா குணராசா கல்லூரியின் அபிவிருத்திச் சபை சார்பில் நன்றியுரை வழங்கினார். (இ-5)

## நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஷெல் தாக்குதலின் போது மரணமான சந்திரதாசனுக்கு யாழ். மாநகரசபை ஊழியர் நிவாரண நிதியில் இருந்து ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. இ. விசே சிவஞானம் உறவினர்களிடம் இத்தொகையை கையளித்தார். (இ-10)

# மீற்றரில் மாற்றம்; சட்டவிரோத மின் பாவனை

## நல்லூரில் 100 பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை31

நல்லூர் பகுதியில் மூன்று தினங்களில் 100க்கு மேற்பட்ட சட்ட விரோத மின்பாவனையாளர்களும், மீற்றரில் மாற்றம் செய்து மின்சாரம் பெற்றவர்களும் கண்டு பிடிக்கப்பட்டனர்.

நல்லூர் அபிவிருத்திச் சபை உப அலுவலக உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின்போதே இவர்கள் பிடிபட்டனர்.

மீற்றரில் மாற்றம் செய்து மின்சாரம் பெற்றவர்களிடமிருந்து 8,400 ரூபா அபராதமாக பெற்ற பின்பே மீண்டும் விநியோகம் வழங்கப்பட்டது.

சட்டவிரோத மின் பாவனையாளர்களில் 48 பேருக்கு அவர்களின் விண்ணப்பங்களை பரிசீலித்து சட்டப்படி மின் விநியோகம் அபராதத்துடன் வழங்க உப அலுவலகம் ஒழுங்கு செய்துள்ளது. (இ-5)


யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

01-08-1986 தொடக்கம் இல. 891, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள எமது சங்க இரும்புக் கிளையில் தரமான இரும்பு வகைகள், பலவிதமான ஆணிகள், பிணைச்சல்கள், பைப், வாளி, பெயின்ற் வகைகள் ஆகிய பொருட்கள் மொத்தமாக கொள்விலையில், மலிவாக, 15-08-1986 வரை விற்பனை செய்யப்படும்.

குறிப்பு:

மேலதிக தகவல்கள் தேவைப்படின் வேலை நேரங்களில் (மு ப. 8 30—பி ப 5 00) 259, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

பொது முகாமையாளர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

சோம்பலுடன் அமர்ந்து இருக்காதே உன்னிடம் உள்ள சிறப்பான இயல்பு தெய்வீகமானது என்பதை அறிந்து கொள்.
—சுவாமிசிவானந்தர்

உதயன்
உண்மை - நடுநிலை - ...
இல 15 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,   தொலைபேசி 24805 22073
31-07-86   த பெ 23

# பரீட்சை சீராக நடக்க உதவுங்கள்

கல்விப் பொதுத் தராதரப் (உயர்தரம்) பரீட்சை நாளை முதலாம் திகதி ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 64 பரீட்சை நிலையங்களில் 7,969 பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள் இவர்களில் மூன்று சாரார் உளர். பாடசாலைப் பரீட்சார்த்திகள், தனிப்பட்ட பரீட்சார்த்திகள், இடம்பெயர்ந்த பரீட்சார்த்திகள்.

இம்முறை பெரும் சிரமங்களின் மத்தியில் பரீட்சையை நடத்த வேண்டி உள்ளது. பரீட்சையைச் சீராகவும், அமைதியாகவும் நடத்த ஒத்துழைப்புத் தாருங்கள் இவ்வாறு யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

பெற்றோர், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகளின் பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்கங்கள், பிரசைகள் குழுக்கள் ஆகியன பரீட்சை சீராகவும், அமைதியாகவும் நடப்பதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுதலுக்குச் செவிசாய்த்து பரீட்சை சீராக நடப்பதற்கு முன்கண்ட தரத்தார் யாவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டியது அவசியம் என்பதை நாமும் வலியுறுத்த விரும்புகிறோம்.

மேலும் எமது வருங்காலச் சிறாரின் கல்வி நலனில் அக்கறை கொண்ட சகலரும் இதுவிடயத்தில் அக்கறை காட்டவேண்டியது அவசியம்.

சிவில் நிர்வாகமும், சட்ட அமுலும் குன்றி இருக்கும் இவ்வேளையில் பரீட்சை நிலையங்களில் அசம்பாவிதங்கள் நடப்பதையும், பரீட்சை குழப்பப்படுவதையும் தடுக்கவேண்டிய பொறுப்பில் பெரும்பகுதி, புனித இயக்கங்களுக்கு உண்டு என்பது எமது கருத்து.

பரீட்சைகள் ஒருவனின் கல்வித் தரத்தை அல்லது அறிவு ஞானத்தைச் சரியாக எடைபோட வல்லனவா என்பது சர்ச்சைக்குரிய விடயம். அதாவது ஒருவனின் கல்வித் தரத்தைத் தரம் பிரிப்பதற்கு பரீட்சைகள் பூரணத்துவமான அளவு கோல்களா என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அது ஆராய்ச்சிக்கு உரிய விடயம்.

மேலும், எமது உரிமைப் போராட்டக் காலத்தில் கல்வியில் அதிக நாட்டம் தேவையில்லை என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் சிலர் மத்தியில் நிலவி வருகிறது.

எமக்குக் கிடைக்கும் அரசியல், பொருளியல் சுதந்திரங்களை தக்கபடி அனுபவிக்க கல்வி அறிவுள்ள எதிர்காலச் சமுதாயம் அவசியம்—முக்கியம். உலகின் பல நாடுகளும் கல்வி அறிவைப் பெருக்குவதில் நாட்டம் கொண்டிருக்கின்றன. படிப்பு வாசனை எழுத்து வாசனை குறைந்த மக்களைக் கொண்ட நாடுகள் என்று கணிக்கப்பட்டவை கூட இப்போது கல்வி கேள்வியில் சிறந்து விளங்குகின்றன, இல்லையேல் முன்னேறி வருகின்றன.

அத்தகைய புறச் சூழ்நிலையில் நாம்மட்டும் பின்னேக்கிச் செல்வதா? இலங்கைத் தமிழர்கள், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் கல்வியில் சிறந்தவர்கள், அதில் நாட்டம் கொண்டவர்கள் என்று பெயர் எடுத்தவர்கள் அத்தகைய ஒரு சமூகத்தைச் சேர்ந்த எமது பிள்ளைகள், கல்வி நிலையில் பின்தங்குவதா? அது ஆகாது.

எமது எதிர்காலச் சந்ததியினரின் கல்வி முன்னேற்றத்துக்குத் தடை போடுவதற்குப் பிறர் எடுக்கும் முயற்சிகளை - சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டியவர்கள் நாம்.

அவ்வாறிருக்கையில், நாமே பரீட்சைகளைக் குழப்பி எமது சிறாரின் கண்ணின் மணியைப் போடுவதா? உலகத்தை-கல்வி வெளிச்சத்தைக் காணவிடாது அவர்களை இருட்டிற்குள் தள்ளுவதா? அதுவும் ஆகாது.

எந்த வகையில் பார்த்தாலும் பரீட்சைகளைக் குழப்புவது ஏற்புடைத்தல்ல. எனவே நாளை தொடங்கும் பரீட்சை, சீராகவும் அமைதியாகவும் நடந்து முடிவதற்கு வருங்காலச் சந்ததியின் கல்வி வளர்ச்சியில்—சமூகவளர்ச்சியில் நாட்டம் உள்ள சகல தரப்பாரின் ஒத்துழைப்பும் உதவியும் அவசியமாகும்.

### 1983 ஜூலை வன்செயலில்

# பாதிப்புற்ற இந்திய பிரசைகளுக்கு நஷ்டஈடு

புதுடில்லி, ஜூலை 30

1983 ஜூலை வன்செயலில் பாதிக்கப்பட்ட இந்தியப் பிரசைகளுக்கு இலங்கை அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

இப்படி இந்திய அரசு, இலங்கை அரசுக்கு அறிவித்து விட்டது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் இலங்கை ஜனாதிபதிக்கு இந்திய அரசின் கோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்.

இத்தகவலை இந்திய வெளியுறவு அமைச்சர் பி. சிவ்சங்கர் இந்திய நாடாளுமன்றத்தில் செவ்வாயன்று தெரிவித்தார்.

வன்செயலில் பாதிக்கப்பட்ட இந்தியப் பிரசைகளுக்கு கருணைத் தொகைதான் வழங்கப்பட்டது ஆனால் நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படவில்லை.

இப்படி அமைச்சர் தெரிவித்தார். (இ-ஜ.எ)

# ஸ்திரமான சீனு; ரஷ்யாவிற்கு சவாலாகும்

வாஷிங்டன், ஜூலை 30

அமெரிக்க, ஜப்பான் உதவிகளுடன் சீனு தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டால் ரஷ்யாவிற்கு மிகவும் சவாலாக அமையும்

இதனுல் ஐரோப்பிய ஆசிய தரைப் பகுதிகளிலும் தூர கிழக்கு நாடுகளிலும் ரஷ்யாவின் ஆதிக்கம் பெரும் அளவில் கட்டுப்படுத்தப்படும்.

கார்ட்டரின் வெளிநாட்டுக் கொள்கை ஆலோசனை நிபுணரான பிஸிக்னியூ பிரேஸின்ஸ்கி இவ்விதம் கருத்து வெளியிட்டார்.

பசுபிக் முக்கோணம் என வழங்கப்படும் அமெரிக்க, ஜப்பான் - சீன நாடுகளின் தொடர்பு இராணுவ மயமான தன்று என்றும் அரசியல் பொருளாதார அன்னியோன்னியத்தை கொண்டிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்

சீன - ரஷ்ய எல்லைகளில் குவிக்கப்பட்டிருக்கும் ரஷ்ய துருப்புக்களைக் குறைத்தால், கம்பூச்சியாவிலிருக்கும் வியட்னுமிய துருப்புக்களை வாபஸ் பெறுதல், ஆப்கானிஸ்தானிலிருக்கும் ரஷ்ய துருப்புக்களை வாபஸ் செய்தல் ஆகிய சீன தரப்புக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு சீன ரஷ்ய ராஜீக உறவுகள் ஸ்திரப்படுமாளுல் அது வரவேற்கத்தக்கதாக அமையாது.

அதனுல் பசுபிக் முக்கோண நாடுகளின் உறவுகள் நெருக்கமடைந்து உறுதியான சீனுவை நிலைநாட்ட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ)

# பஞ்சாப் ஒப்பந்தம் பிரச்சினையால் தடங்கல்

புதுடில்லி, ஜூலை 30

மத்திய அரசு நல்ல நோக்கத்தைக் கொண்டிருந்தும் கூட பஞ்சாப் ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதில் சில பிரச்சினைகள் தோன்றிவிடுகின்றன பலமுறை திகதிகள் மாற்றப்பட்டுள்ளன

இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் திரு பூட்டாசிங் தெரிவித்துள்ளார்

இந்த ஒவ்வொரு திகதி மாற்றமும் பஞ்சாப் முதலமைச்சர் பர்னுலா கேட்டுக் கொண்டதாலேயே மாற்றப்பட வேண்டியிருந்தது. இப்பொழுது பரஸ்பர ஆலோசனைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முயலுகின்றோம் இதனுல் உடன்பாடான தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது

அகாலிதள் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற பிரகாஷ்சிங் பாதலும் ஜீ. எஸ் தோடாவும் சுயநலவாதிகளுடனும் பயங்கரவாதிகளுடனும் வெளிப்படையாகவே சேர்ந்திருக்கின்றனர்.

தீவிரவாதிகளுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இந்த இரு தலைவர்களும் உடந்தையாக இருப்பதால் பஞ்சாபின் நிலைமை மோசமடைகின்றது.

இவ்வாறு பூட்டாசிங் தெரிவித்தார். (ஒ)

# இரசாயன ஆயுத உற்பத்திக்கு ரேகன் அங்கீகாரம்!

## 1988இல் உற்பத்தி ஆரம்பம்

வாஷிங்டன், ஜூலை 30

புதியரக ரசாயன ஆயுதங்களின் உற்பத்திக்கு அமெரிக்கா அங்கீகாரம் வழங்கியுள்ளது

நேற்று வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ரேகன் இத்தகவலை வெளியிட்டார்.

17 வருடங்களுக்குப் பின்னர் முதற்தடவையாக இத்தகைய அங்கீகாரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் காலக்கிரமத்தில் இந்த ஆயுதங்கள் அனைத்தும் தடை செய்யப்படும் என்று ஜனாதிபதி ரேகன் கூறினார்.

இந்த புதியரக ஆயுதங்களின் முதற்தொகுதி உற்பத்தி 1988 ஆம் ஆண்டு இறுதியில் ஆரம்பிக்கப்படலாம் என வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

# பயங்கரவாதத்தை ஒழிக்க அரசியல் சாசனம் திருத்தம்

## ராஜீவ் நடவடிக்கை

புதுடில்லி, ஜூலை 30

பயங்கரவாதத்தை ஒழிக்கும் முதல் நடவடிக்கையாக அரசியல் சாசன திருத்தம் ஒன்று அவசியமானது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எதிர்க்கட்சித் தலைவர்களுடன் இதுபற்றி ஆலோசனை நடத்தியுள்ளார்.

எல்லைப் பகுதிகளில் தேச விரோத சக்திகளும் பிரிவினைவாத சக்திகளும் தோற்றுவிக்கும் நிலைமையை முறியடிப்பதற்கு அந்த மசோதா போதுமான அதிகாரங்களை அளிக்கும்.

பிரிவினைவாத - தேச விரோத சக்திகள் நாட்டின் ஒற்றுமைக்கும் சுதந்திரப்பாட்டுக்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றன. தவிர அண்டை நாடுகள் சிலவும் அச்சக்திகளுக்கு ஊக்கமளித்து வருகின்றன.

இவற்றை மாற்றுவதற்கும் இந்தியாவின் சுதந்திரத்தை காப்பாற்றவும் இத்திருத்தம் அவசியமாகிறது.

இவ்வாறு ராஜீவ் தெரிவித்தார். (ஒ)

## சிவ்சங்கர் பங்களாதேஷ் விஜயம்

டாக்கா, ஜூலை 30

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு சிவ்சங்கர் பங்களாதேஷில் இரண்டுநாள் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அவர் பங்களாதேஷ் தலைவர்களுடன் இருதரப்பு பிராந்திய பிரச்சினைகள் பற்றி பேச்சுக்கள் நடத்துவார்.

சமீபத்தில் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்த பங்களாதேஷ் ஜனாதிபதி ஏர்ஷாட் இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களைத் தொடரும் வகையில் திரு சிவ்சங்கரின் இந்தப் பயணம் அமைந்துள்ளது. (ஒ)

## வெளி உலகில்

### ஜெயரத்தினம் குற்றச்சாட்டு

சிங்கப்பூர் அரசாங்கம் நீதி விசாரணைத்துறையில் குறுக்கீடு செய்வதாக முக்கியஎதிர்க்கட்சி பிரமுகர் திரு பெஞ்சமின் ஜெயரத்தினம் குற்றம் சாட்டியுள்ளார்.

### மகளிர் கழகம்

இந்தியாவில் உள்ள சகல மாநிலங்களிலும் மகளிர் மேம்பாட்டு கழகத்தை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

### ராஜீவுக்கு அழைப்பு

அடுத்தவருடம் யூகோஸ்லாவியாவிற்கு விஜயம் செய்யுமாறு அந்தநாட்டு பிரதமர் இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கு அழைப்பு விடுத்துள்ளார். (இ-ஒ)

### பிரிட்டன் மீது போத்தா கண்டனம்

பிரிட்டிஷ்வெளிநாட்டமைச்சர் ஸர் ஜெப்ரி ஹோவ் தமது உள்நாட்டு விவகாரங்களில் அநாவசியமாகத் தலையிடுகின்றார் என தென் ஆபிரிக்க ஜனாதிபதி போத்தா கண்டனம் தெரிவித்துள்ளார்.

### இலங்கை பரிவர்த்தனை ஸ்தானம்

சர்வதேச தபால் நிறுவனம், ஆசிய பிராந்தியத்துக்கான பிரதான தபால் பரிவர்த்தனைஸ்தான[illegible] இலங்கையைப் ப[illegible] படுத்துகிறது.

### அ. தி. மு. கவு[illegible] இணைந்தது

தமிழ்நாடு உ[illegible] பாவர் முன்னே[illegible] கட்சி அ. தி. மு. [illegible] இணையத் தீர்[illegible] துள்ளதாக அத[illegible] வர் கார்க்கபந்து [illegible] வித்தார்.

## சமய சந்நிதிகளில்

### புவனேஸ்வரி அம்பாள் மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஏழாலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஏழாம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், எட்டாம் ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், ஒன்பதாம் திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெற இருக்கின்றன. (இ)

### மின்விநியோகம் துண்டிப்பு

புங்குடுதீவு, ஜூலை 31

புங்குடுதீவில் மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுகிறது இதனுல் இங்குள்ள மின் பாவனையாளர்கள்பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள். (இ-131)



குறள்:
இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்.

பொருள்:
ஒப்புரவு அறிந்து ஒழுகுதலாகிய தம் கடமை அறிந்த அறிவை உடையவர், செல்வ வளம் இல்லாத காலத்திலும் ஒப்புரவுக்குத் தளர மாட்டார்.

### கடற்படையினர் அழைத்துச் சென்ற

# சீநோர் தொழிலாளி வீடு திரும்பவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 31

கடந்த திங்கட்கிழமை காரைநகர் கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட சீநோர் தொழிலாளி (35 வயது) பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

சீநோர் தண்ணீர் விநியோக நிலையத்தில் கடமை ஆற்றும் இவரை திங்கட்கிழமை கடற்படையினர் அழைத்துச் சென்றனர்.

கடற்படையினர் இவரை அழைத்துச் செல்லும் வழியில் இறங்குதுறையில் போராளிகள் — சிப்பாய்கள் மோதல் இடம்பெற்றது.

தொழிலாளி இதுவரை வீடு வந்து சேரவில்லை.

இதுபற்றி சீநோர் அதிகாரிகள் காரைநகர் முகாமுடன் தொடர்பு கொண்டனர்.

தொழிலாளியை தாம் இறங்குதுறையிலேயே விட்டுவிட்டதாக கடற்படையினர் தெரிவிக்கின்றனராம். (இ-5)

### சுகாதார நிலைய மீளாய்வுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஆரம்ப சுகாதார நிலைய மீளாய்வுக் கூட்டம் கைதடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

கைதடி தெற்கு கைதடி வடக்கு, நாவற்குழி, மறவன்புலோ ஆகிய பகுதித் தொண்டர்கள் குடும்பநல சேவையாளர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். சுகாதார பரிசோதகர் திரு. ஏ. செல்லையா தலைமை வகித்தார்.

யாழ் சுகாதாரப் போதனாசிரியர் திரு. என். வைத்தீஸ்வரன், சுகாதார வேலைகள் சம்பந்தமாக கருத்துரை நிகழ்த்தினர்.

இன்றைய கால கட்டத்தில் முதலுதவிப் பயிற்சி கூடியளவு எல்லோரும் பெற்று இருக்க வேண்டும் என்று தலைமை வகித்துப் பேசிய சுகாதாரப் பரிசோதகர் திரு. செல்லையா தெரிவித்தார். (உ.எ)

### தரமுயர்த்தும் வைபவம் அக்டோபரில்

மட்டக்களப்பு, ஜூலை 31

மட்டக்களப்பு வளாகக் கல்லூரியை இலங்கைப் பல்கலைக் கழகமாகத் தரமுயர்த்தும் வைபவம் எதிர்வரும் அக்டோபர் மாதம் 1 ஆம் திகதி நடைபெறும்.

தற்போதைய விவசாயம், விஞ்ஞான பீடங்களுடன் வர்த்தகம், முகாமைத்துவம் ஆகிய பீடங்கள் இவ் வருடம் ஆரம்பிக்கப்படும் (இ-81)

# விவசாயிகளுக்கு தேவையான பசளை

## கப்பல் மூலம் வருகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ் மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விமிக்சர், யூரியா பசளைகள் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து இவ் வார முடிவில் தருவிக்கப்படவுள்ளன.

இவற்றை கடனடிப்படையாக வாங்கி விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் விநியோகிக்குமாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கமநலசேவை நிலையங்கள் தனியார் துறையினர் ஆகியோரைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோரியுள்ளார்கள். (இ-9)

### இடம் மாற்றம்

மானிப்பாய், ஜூலை 31

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபையின் ஏறாவூர் உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரான திரு. சங்கரப்பிள்ளை சந்தசாமி இம்மாதம் 9 ஆம் திகதி முதல் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை சுன்னாகம் உப அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இ. இராமலிங்கம் பதவி உயர்வு பெற்று வவுனியா நகரசபை அலுவலகத்துக்குச் சென்றுள்ளார். (இ-90)

# மன்னரில் கைதானவர் சடலமாக ஆஸ்பத்திரி கொண்டு வரப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 31

மன்னரில் கைது செய்யப்பட்டவர் சடலமாக மன்னர் ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டார்.

திங்கட்கிழமை மன்னர் எழுத்தூர் பகுதிக்கு ரோந்து சென்ற சிப்பாய்கள் அங்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனுல் ஒருவர் காயமடைந்தார்.

மேலும் இரண்டு பேரைக் கைது செய்ய முற்பட்ட பொழுது ஒருவர் தப்பி ஓடிவிட்டார். மற்றவர் சிப்பாய்களினுல் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் தாமோதரம்பிள்ளை கண்ணதாசன் வயது 29.

இவரைக் கொண்டு சென்ற சிப்பாய்கள் பின்னர் சடலமாக மன்னர் ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து சேர்த்தனர்.

சடலத்தை [illegible] இந்த பிரேத பரிசோதனை வைத்தியர் சடலத்தில் அடிகாயங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்.

சடலம் செவ்வாய்க்கிழமை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

இதேவேளை சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மனேகரன் (31 வயது) என்பவர் காயமடைந்து மன்னர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் மன்னர் நீர்விநியோகப் பகுதியில் கடமையாற்றுபவர். (இ-10)

### கல்விக் கண்காட்சி

புங்குடுதீவு, ஜூலை 31

புங்குடுதீவு வட்டாரப் பாடசாலைகளின் கண்காட்சி அக்டோபர் முதலாம் திகதி புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-131)

### ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை:

# அனுமதிப் பத்திரம் கிடையாதோர் என்ன செய்யலாம்?

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் கிடைக்காதவர்கள் தங்கள் பகுதி பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களைச் சந்தித்து, தங்கள் பெயரை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

மேற்பார்வையாளரின் அனுமதியுடன் பரீட்சைக்கு தோற்றலாம் என்று கல்வித்திணைக்களம் ஆலோசனை வழங்கியுள்ளது.

அதே சமயம் அனுமதிப்பத்திரம் வந்து சேராத தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தற்போது அவை வந்து சேருகின்றன.

ஒரு சிலருடையவை அரச அதிபரால் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டன.

அவை கல்வித் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுகின்றன.

மற்றவை கொழும்பிலிருந்து தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-5)

# சுன்னகம் பஸ் நிலைய பாலம் திருத்தப்பட்டது

உடுவில், ஜூலை 31

சுன்னகம் பஸ் நிலையத்துக்கு முன்னால் இருந்து வாகனப் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருந்து வந்த பாலம் அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டது.

இதனுல் பொதுமக்களின் சிரமங்கள் தீர்க்கப்பட்டன.

கழிவு நீர் வாய்க்காலுக்குமேல் இந்தப்பாலம் அமைந்துள்ளது.

சுன்னகம் உப அலுவலக பொறுப்பதிகாரி திரு. ச. சந்தசாமியின் முயற்சி காரணமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. (இ-எ.27)

### வேலணை, புங்குடுதீவு ப. நோ. கூ. ச.

# மழைகாலத்துக்கு முன் விதை நெல், பசளை களஞ்சியப்படுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வேலணை, புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், கமநல சேவை நிலையங்களும் மழைகாலத்துக்கு முன்னர் விதைநெல், பசளை ஆகியவற்றைக் களஞ்சியப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

மழைகாலம் வந்தால் துறைகளைக் கடந்து இவற்றைக் கொண்டு செல்வதில் உள்ள கஷ்டங்களை கருதியே இவ்வாறு செயற்படுகின்றன.

கூட்டுறவு சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. வே. சண்முகலிங்கம், கமநலசேவைசிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. க பரமலிங்கம் உரிய உதவிகளை வழங்கியுள்ளார்கள். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**88 IIIம் பிரிவு**

A/L வகுப்புக்கள் ஆரம்பம்:

02-08-1986 சனி காலை 9 30 மணி

PHYSICS 9.30-10.30 CHEMISTRY 10.30-11.30

ZOOLOGY 11.30-12.30 BOTANY 12.30-1.30

PURE & APP. MATHS 11.30 - 1.30

விபரங்கட்கு:-

**New Master Institute**

B.M.C. Lane, Jaffna



# உதயன்

31-07-1986 வியாழக்கிழமை



**A/L 86**

பரீட்சார்த்திகளுக்கு!

பரீட்சையில் சிறப்பாக வெற்றியடைய

எம் நல்லாசிகள்!

**New Master Institute**

—ஆசிரியர்கள்


## விளையாட்டரங்கு

## ஒஸ்மானியா அணிக்கு கிடைத்த அமோக வெற்றி

### 8 : 0 கோல்களினால் வெற்றி முன்னணியில்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வடமாநில கல்வித் திணைக்களம் நடத்தும் 19 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி அமோக வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஒஸ்மானியாக் கல்லூரி அணி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியை 8:0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது.

இடைவேளைக்கு முன்னர் நான்கு கோல்களும்-

இடைவேளைக்குப் பின்னர் நான்கு கோல்களும் அடிக்கப்பட்டன.

தொடக்கம் முதல் முடியும்வரை ஆட்டத்தில் ஒஸ்மானியாக்கல்லூரியின் கையே ஓங்கியிருந்தது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீரர்கள் திறமையாக ஆடவில்லை.

இந்த ஆட்டத்திற்கு திரு. ஆர். மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.

போட்டிக்கான ஏற்பாடுகளை வட்டாரக் கல்வியதிகாரி (உடற்கல்வி) திரு. வி. கணேசலிங்கம் செய்திருந்தார். (உ-7)

குழம்பிய உதைபந்தாட்டப் போட்டி

## மீண்டும் விளையாட யாழ் இந்து மறுப்பு

### மகாஜனாவுக்கு வெற்றி வழங்கப்படலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

கடந்த வாரம் குழப்பத்தில் முடிவுற்ற தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான அரை இறுதி உதைபந்தாட்டத்தில் மீண்டும் விளையாடுவதற்கு யாழ் இந்துக் கல்லூரி மறுத்துவிட்டது.

இதனால் நேற்று நடைபெறவிருந்த இந்த அரைவிறுதி ஆட்டம் நடைபெறவில்லை.

இந்துக் கல்லூரி மறுத்திருப்பதால் அனேகமாக இந்த ஆட்டத்தின் வெற்றி மகாஜனாவுக்கு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆட்டம் குழப்பத்தில் முடிவடைந்ததை அடுத்து இது தொடர்பாக ஆராய்வதற்கு வடமாநில கல்வித் திணைக்களத்தில் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது என்பதும் —

இவ்வாட்டம் மீண்டும் நடைபெறவேண்டும் என அங்கு தீர்மானிக்கப்பட்டதும் தெரிந்ததே.

யாழ் இந்து, விளையாட மறுப்பதாக தெரிவித்து அக் கல்லூரி அதிபர் கல்விப் பணிப்பாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாக அறிய வருகிறது.

அதிபரின் விளக்கம்

* இந்த ஆட்டம் மீண்டும் நடைபெறுமானால் உதைபந்தாட்டத்திற்குத் தொடர்பு அற்ற முறையில் வீரர்களின் உடலுக்குத் தீங்கு ஏற்படக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. ஆகையினால் இந்த ஆட்டத்தை விளையாடுவதைத் தவிர்க்குமாறு — இப்படி வீரர்களின் பெற்றோர்கள் கோரியிருக்கிறார்கள்.

* இந்த ஆட்டத்தை மீண்டும் விளையாடுவது இத்தகைய அசம்பாவிதங்கள் மீளவும் நடைபெறுவதை வரவேற்பதாகவும், திரும்பத் திரும்ப மீள் ஆட்டங்கள் நடைபெறச் செய்வதை ஊக்குவிப்பதாகவும் அமையும்.

இந்தக் காரணங்களினால் இந்த ஆட்டத்தில் விளையாடுவதைத் தவிர்ப்பது என யாழ் இந்து விளையாட்டுக் குழு தீர்மானித்துள்ளது — இப்படி யாழ் இந்து அதிபர் தமது கடிதத்தில் தெரிவித்திருப்பதாக அறிய வருகிறது. (உ)

## இஸ்ரவேல், கொரிய கப்பல் இங்கு வரும்

கொழும்பு, ஜூலை 31

வடக்கு, கிழக்கு கரையோரப் பாதுகாப்புக்கு என இலங்கை அரசவாங்கும் 15 நவீனரகக் கப்பல்களும் இஸ்ரவேல், தென்கொரியா ஆகிய நாடுகளிடமிருந்தும் பெயர் குறிப்பிடாத மூன்றாவது நாடு ஒன்றிடமிருந்தும் கொள்வனவு செய்யப்படும்எனத் தெரியவருகிறது.

அனேகமாக மூன்றாவது பெயர் குறிப்பிடாத நாடு அமெரிக்காவாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நவீனராடர் வசதிகள் கொண்ட இந்தக் கப்பல்கள்- ஒவ்வொன்றும் 40 லட்சம் ரூபாவுக்கு அதிகமான பெறுமதி யுடையவை.

இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான உயர்மட்டப் பேச்சுகள் முடிவடைந்திருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## ஆயுதம் வைத்திருந்து என்ன பயன் என்கிறார் கடற்படைக் கப்டன்

கொழும்பு, ஜூலை 31

எதிரிகளுக்கு எதிராக ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் வைத்திருப்பதில் என்ன பயன் உண்டு?

இப்படி கடற்படைக் கப்டன் டபிள்யு. டபிள்யு. இ. சி. பெர்னாண்டோ கேட்டார்.

ராகம கடற்படைத் தளத்தில் அண்மையில் பயிற்சி முடிந்து வெளியேறிய கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்ற பின்னர் நடந்த வைபவத்தில் கப்டன் பெர்னாண்டோ பேசினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

திவிரவாதிகளுடன் மோதும் சமயத்தில் அப்பாவி மக்களைக் காப்பாற்றவேண்டியது படையினரின் முக்கிய கடமையாகும். இந்த நடவடிக்கையில் தீவிரவாதிகள் தப்பி ஓட அனுமதிக்கக் கூடாது.

நாட்டின் இறைமைக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு எதிராக படையினர் ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டும். இப்படி அவர் சொன்னார். (இ-எ)

## 275 பேர் இன்னும் பூஸாவில்

திருகோணமலை, ஜூலை 31

திருகோணமலையைச் சேர்ந்த 275 தமிழர் இன்னும் பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

திருமலையில் ஜூன் 24 ஆம் திகதி நடந்த தேடுதல் வேட்டையில் கைது செய்யப் பட்டவர்களில் 497 பேர் பூஸா தடுப்பு முகாமுக்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களில் 131 பேர் முதலில் விடுதலைசெய்யப் பட்டனர். ஜூலை 20 இல் மேலும் 91பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

மிகுதி 275 பேர் இன்னும் விடுவிக்கப்படாமல் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்' (இ-எ-150)

## தேசிய ஆங்கில சான்றிதழ் பரீட்சையை யாழ் நகரில் நடத்தும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 31

தேசிய ஆங்கிலச் சான்றிதழ் இரண்டாம் பகுதிப் பரீட்சையை (வாய்மொழி) யாழ்ப்பாணத்திலும் நடத்தும்படி கல்விமான்களும் பெற்றோரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக உடுவில் மகளிர் கல்லூரி உயர் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் செல்வி. ஆர் ஜே. மேன் பின்வருமாறு கண்டனம் தெரிவித்து மகஜர் அனுப்பி உள்ளார்:-

பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரியபோது யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நடைபெறும் என்று அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு, யாழ்ப்பாணப் பிரயாணம் தடைபட்டு உள்ள இக்காலகட்டத்தில் இந்த அறிவித்தலைமீறி தமிழ் மாணவர்களை கொழும்பு வருமாறு கோரியுள்ளமை கண்டிக்கத்தக்கது.

கடந்த காலங்களில் ஜீ. சி. ஈ சாதாரண தர உயர்தரப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் எவ்விதப் பிரச்சினையும் இல்லாது நடைபெற்றுள்ள பொழுது இப் பரீட்சையை மட்டும் இங்கு நடத்த மறுப்பது நியாய மாகுமா?

—இவ்வாறு செல்வி. மேன் தனது மகஜரில் கோரியுள்ளார்.

இரண்டாம் பகுதிப் பரீட்சை இம்மாதம் 28 ஆம் திகதி கொழும்பில் நடந்தது. அங்கு வருமாறு யாழ் பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர்.

இதேவேளையில் இவ்விடயத்தைப் பெற்றோர், ஆசிரியர் குழுக்கள் யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். (இ-9)

## பட்டதாரி இறுதிப் பரீட்சை மாணவனை விடுவிக்கக்கோரி அத்துலத்துக்குக் கடிதம்

கல்முனை, ஜூலை 31

தடுப்புக் காவலிலுள்ள தமிழ் இளைஞன் தேவதாஸனை விஞ்ஞானப் பட்டதாரி இறுதிப் பரீட்சை எடுப்பதற்காக உடனடியாக விடுவிக்குக!

இப்படிக் கோரி, அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை முன்னாள் உறுப்பினர் திரு. ஆ. வேல்முருகு தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலிக்கு அவசரக் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

தேவதாஸன் கடந்த டிசம்பர் 22 ஆம் திகதி ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்.

அவர் விஞ்ஞானப் பட்டதாரி(பி எஸ் ஸி) இறுதி ஆண்டு மாணவர்.

எதிர்வரும் டிசம்பரில் அவர் இறுதிப் பரீட்சை எழுத வேண்டியுள்ளது.

பல்கலைக் கழகப் பதிவாளர் இது சம்பந்தமாக அறிவித்துள்ளார். அவரை உடனடியாக விடுவிக்கவும்.

இப்படி திரு. வேல்முருகு அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (இ-எ-84)

## கொழும்பில் குண்டுப்புரளி

கொழும்பு, ஜூலை 31

கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதி நேற்றுப் பகல் குண்டுப் புரளியால் அல்லோலகல்லோலப்பட்டது.

கராஜ் ஒன்றில் சிலிண்டர் ஒன்று வெடித்ததை தொடர்ந்தே, குண்டுப் புரளி பரவியது(இ-ஐ-எ)

## இந்திரா கொலை உள் இரகசியம் அம்பலத்துக்கு வராது

புதுடில்லி. ஜூலை 31

இந்திரா கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த சக்கார் கமிஷனின் இறுதி அறிக்கையை இரகசியமாக வைப்பது என இந்திய அரசு தீர்மானித்திருக்கிறது.

பொது நலனைக் கவனத்தில் கொண்டு இதனைப் பகிரங்கப் படுத்துவதில்லை எனது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

கமிஷன் அறிக்கையை நாடாளு மன்றத்திற்குக் கூட சமர்ப்பிக்க முடியாத வகையில் முடிவு ஒன்றை எடுக்கும் அதிகாரத்தை வழங்கக்கூடியதாக இந்திய சட்டங்களில் நேற்று மாற்றம் கொண்டுவரப்பட்டது.

இதற்கான சட்டம் நேற்று இந்திய லோகசபையில் எதிர்க்கட்சியின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது. அதை அடுத்தே சக்கார் கமிஷன் அறிக்கையை இரகசியமாக வைப்பது என்ற முடிவு அறிவிக்கப்பட்டது. (உ)

## எண்ணெய்ப் படிவங்கள் ஆந்திராவில் கண்டுபிடிப்பு

புதுடில்லி, ஜூலை 31

இந்தியாவில் நிலமட்டத்திற்கு அடியில் முதல் தடவையாக எண்ணெய் வளம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆந்திரப் பிரதேசத்தில் விஜயவாடாவில் இருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் கிருஷ்ணா கோதவாரி பகுதியில் செய்யப்பட்ட அகழ்வு நடவடிக்கையின் போது இந்த எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டது.

1960 மீற்றர் ஆழத்தில் எண்ணெய்ப் படிவுகள் இருப்பதாகவும்—

அதன் விஸ்தீரணம், கனவளவு ஆகியவை பற்றிய முழுவிபரமும் அறியப்பட வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பரீட்சை நிலையமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

நாளை ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த உயர்தரப் பரீட்சை மண்டபங்களில் வட இந்து மகளிர் கல்லூரியில் உள்ள இலக்கம் 53 மண்டபம் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சின்னத்தம்பி வித்தியாலயத்தில் உள்ள பரீட்சை மண்டபங்கள் இலக்கம் 54, 55 என்பவை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மகளிர் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக வட மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (10)

## இராணுவம் கைது செய்யவில்லையாம்

மண்டைதீவு, ஜூலை 31

மர்மமான முறையில் காணமல் போன மண்டைதீவு மீன்துறை ஆய்வு காவலாளிகள் இருவரையும் இராணுவத்தினர் கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் செல்லவில்லை.

இப்படி கோட்டை இராணுவ முகாமைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இவர்களைக் காணாத பெற்றோர்கள் யாழ் அரசாங்க அதிபர் ஊடாக இராணுவ அதிகாரியுடன் தொடர்பு கொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு வாரத்திற்கு மேல் இவர்களைக் காணவில்லை.

இரு காவலாளிகளினதும் பெற்றோர்கள் அரசாங்க அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்து காணமல்போனோரை மீட்டுத்தர முயற்சி செய்யுமாறு கேட்டிருந்தனர். (உ-88)

மிளகாய் மூடைக்குள் குண்டு:

## கைதான இருவருக்கும் ஆகஸ்ட் 22 வரை விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 31

செத்தல் மிளகாய் மூடைக்குள் குண்டு இருந்த சம்பவம் தொடர்பாக கொழும்பு புறக்கோட்டையில் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழர்களை ஆகஸ்ட் 22 வரை விளக்க மறியலில் வைக்கும்படி கொழும்பு பதில் பிரதம நீதிவான் திரு. ஸ்டான்லி ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

மே 22 இல் கொழும்பு புறக்கோட்டை நான்காம் குறுக்குத் தெருவில் கடை ஒன்றுக்கு லொறியில் இருந்து செத்தல் மிளகாய் மூடைகள் இறக்கப்பட்டுக் கொண்டு இருந்த சமயம் ஒரு மூடைக்குள் ஐந்து கிலோகிராம் எடையுள்ள குண்டு ஒன்றை தொழிலாளி ஒருவர் கண்டு பிடித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக கணேஷ் சிவசுந்தரம், முத்து தெய்வேந்திரம் ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீதான விசாரணை முடிவடையவில்லை என்று பொலிஸார் தெரிவித்ததைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் இருவரும் மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (இ-எ)


**யாழ் நகர மக்களுக்கு!**

அரிய சந்தர்ப்பம்!!

## உதயனின் உதய சேவை

அதிகாலையில் கடைக்குப் போய் பத்திரிகை வாங்க நேரத்தைச் செலவிடாதீர்!

உதயனின் உதய சேவையில் பதிவு செய்து வீட்டில் இருந்தவாறே உதயன், சஞ்சீவி படிக்கலாம்.

உடன் சந்தாதாரராகுங்கள்!

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு அதிகாலையில் வீடுகளுக்குப் பத்திரிகை விநியோகிக்கும் சேவையை நாம் ஆரம்பித்துவிட்டோம்.

நீங்களும் சந்தாதாரராகப் பதிவு செய்தால் வீண் சிரமமின்றி உதயனையும் சஞ்சீவியையும் வீட்டில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ளுங்கள்;

விநியோகப் பகுதி,

'உதயன்',

த பெ. எண்: 23,

யாழ்ப்பாணம்


### தொண்டா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதால் இலங்கையிலும் நிறையப் பிரச்சினைகள் வரும்.

● அரசியல்கட்சிகள் மாநாடு நடக்கும் சமயத்திலேயும் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்படுகின்றனர். இந்நிலையில் தீவிரவாதிகளுடன் பேசமுடியாது. (-எ)

### 4 இலங்கையா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களுக்குள் ஹெரோயின் போதை வஸ்துவை வைத்து உடலினுள் மறைத்துக்கொண்டு வந்த சமயத்தில் தான் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சிறைத் தண்டனையுடன் 430 அமெரிக்க டாலர் அபராதமும் அவர்களுக்கு விதிக்கப்பட்டது. (இ-ஐ-எ)

### கிளிநொச்சி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

ஒரு மாத காலத்தின் பின் நேற்றுக் காலை 9 மணி அளவில் வங்கி மீண்டும் திறக்கப்பட்டு உத்தியோகத்தர்கள் தங்கள் கடமையைத் தொடங்கினர்.

காலை 9-30 மணி அளவில் யுதம் தாங்கிய இளைஞர்கள் வங்கிக்கு வந்து வங்கியை மூடுமாறு பணித்தனர்.

"நகரினுள் எந்த ஒரு திணைக்களமும் இயங்கவில்லை; இராணுவ முகாம் உள்ளவரை உங்கள் உயிருக்கு உத்தரவாதம் இல்லை." என்று இளைஞர்கள் கூறினர்.

உத்தியோகத்தர்களும் உடனே வங்கியை மூடினர் வந்து சேர்ந்... (இ-5)

### ஜி. சி. ஜீ. உயர்தர...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

விசேஷ அறிவுறுத்தல்

இம்முறை மேற்பார்வையாளர்களுக்கு விசேஷ அறிவுறுத்தல்களும், பரீட்சை மண்டபங்களுக்கு பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளன.

இம்முறை வடபகுதிக்கான வினாத் தாள்கள் யாவும் விமானம் மூலம் பலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டுவரப்பட்டு கல்விப் பணிப்பாளரால் பொறுப்பேற்கப்பட்டன.

நாளை ஆரம்பமாகி 25 ஆம் திகதியுடன் முடிவடையும் இப் பரீட்சை எவ்வித காரணங்கொண்டும் மீண்டும் நடத்தப்பட மாட்டாது என்று கல்வியமைச்சர் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

பரீட்சை... கோரிக்கை

இதனால் சகல வொது மக்களையும், பிரசைகள், விழிப்புக் குழுக்களையும், பொது ஸ்தாபனங்களையும் தம்முடன் ஒத்துழைக்குமாறு மாநில கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

அவர் பத்திரிகை மூலமாக வெளியிட்டுள்ள அறிக்கையில்...

பரீட்சை சம்பந்தமான சகல பூர்வாங்க நடவடிக்கைகளும் பூர்த்தியாகி விட்டன.

இப்பரீட்சை எவ்வளவோ சிரமங்கள் மத்தியில் யாழ். மாவட்டத்தில் நடத்தப்படுகின்றது என்பது சகலரும் அறிந்தது.

எமது மாணவரின் எதிர்கால நலனில் அக்கறை உள்ளவர்கள் யாவரும் இப்பரீட்சை சுமுகமாக நடத்தப்பட வேண்டும் என விரும்புகின்றனர்.

பெற்றோர்களுக்கு ஏற்படும் எந்தவகைப் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க நாம் தயாராக உள்ளோம்.

பெற்றோர்கள்- அதிபர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்கங்கள், பிரசைகள் குழுக்கள் மற்றும் கல்வி வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்கள் யாவரும் இப்பரீட்சையை திறம்பட நடத்த உதவ வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (இ-5)


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், நிர்வாகத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 31-07-1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 86


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org